**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1151/2022**

**Deposition of LW-5/PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஸ்வேதா | **Age** | : | 36/2026 |
| **Husband's Name** | : | திரு. தவச்செல்வம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | கூலி வேலை |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22/06/2026.**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கிறார்கள். அ.சா.1 நிதர்சனாவை தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 10.10.2020 ஆம் தேதி மாலை 6 மணிக்கு நிதர்சனா தெருவில் உள்ள பொதுக் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டு இருந்தார் என்றும் அப்போது பக்கத்தில் உள்ள சாக்கடை கழிவுநீர் வெளியேறாமல் தண்ணீர் நிறைந்து ஓடியது என்றும் அப்போது ரமாவும் விருமாயி அம்மாவும் அவரிடம் சென்று சாக்கடையில் நீ குப்பையை கொட்டினாயா என்று கேட்டார்கள் என்றும்

அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் வீட்டிற்குள் சென்ற நிதர்சனாவை ரமாவும், விருமாயி அம்மாவும் வீட்டிற்குள் நுழைந்து கைகளால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் நானும் பக்கத்தில் இருந்த ரவி, சத்தியா ஆகியோர் விருமாயி அம்மாவையும் ரமாவையும் விலக்கி விட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.22 18:16:38 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**